Volume 3 Issue 2 February 2022 E-ISSN: 2582-2063

# நரிக்குறவர்களின் வாழ்வும் வரலாறும்

**முனைவர் ம.ராஜவேல்**
*நூலகர், தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை*

**முன்னுரை**

நாடோடிகளின் நாகரிகம், வரலாறு வாழ்வு இவற்றைப் பற்றி அறிந்து கொள்வது இன்றளவில் கடினமானது எனினும் அதனை அறிந்து கொள்ள இரண்டு நிலைகள் உள்ளன. அதனை எழுதப்பட்ட நிலை எழுதப்படாத வாய்மொழி நிலை என்று இரண்டு நிலைகளின் அடிப்படையில் தெரிந்து கொள்ள முடியும். இதன் அடிப்படையில் நரிக்குறவர்களின் வாழ்வும் வரலாறும் ஆராயப்பட்டுள்ளது.

**நரிக்குறவர் பூர்வீகம்**



நரிக்குறவர்களைப் பற்றி பல்வேறு வரலாறும் வாழ்வியல் உண்மைகளும் செவிவழிச் செய்தியாக வந்த வண்ணம் இருந்தாலும், அவை அனைத்தையும் மெய்ப்பிக்கும் கருத்தாக பேசப்படுவது ஒன்றுதான் இந்த நரிக்குறவர்களுக்கும் தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டக் குறவர்களுக்கும் எந்தத் தொடர்புமில்லை. தற்சமயம் நாடோடிகளாக இருக்கும் குறவர்கள் சங்ககாலக் குறவர்கள் அல்லர். இவ்வாறிருக்க இன்று நாம் காணும் இவ்வின மக்கள் நகரங்களில் வாழ்ந்த 'சத்ரபதி ' என்று வீரத்துடன் அழைக்கப்படும் சிவாஜி மன்னனின் படையில் படைவீரர்களாகப் பணியாற்றியவர்கள் என்கின்றனர். சிவாஜி மன்னனுக்கும், முகலாய மன்னர்களுக்கும் இடையே ஏற்பட்டப் போரில் சிவாஜி தோற்கடிக்கப்பட்ட பின்பு சிவாஜி ஆட்சி செய்த மராட்டியப் பகுதியில் முகலாயர்களுக்கு அடிமையாய் வாழ விரும்பாமல் நாட்டை விட்டு வெளியேறிக் காட்டை நோக்கிச் சென்றனர் என்றும், காடுகளில் மறைவிடமாக வாழ்ந்த இவர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வழியாகத் தமிழகம் வந்து சேர்ந்தனர் என்றும், இவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர் என்றும் தெரிகிறது.

மேலும் இவர்கள் லம்பாடி இனத்தை சார்ந்தவர்கள் என்றும் சொல்வதுமுண்டு. குறவர் இனத்தில் பெண்கள் அழகுள்ளவர்கள், ஆணுக்கு நிகரானவர்கள். குறவர்களிடம் பெண்ணடிமை என்பது இல்லை. ஆனால் மாலை 6 மணிக்குள் வெளியில் சென்ற பெண் கணவனை அடைய வேண்டும் என்பது இவர்களின் கட்டுப்பாடு. விதவை மறுமணம், வெளிப்படையான பாலுறவு இவர்களின் சமூகத்தில் உண்டு. பாலுறவுக்கு பஞ்சமில்லை என்பதால் இவர்களிடம் விபச்சாரம் என்பதில்லை

மகாராஷ்டிரா குஜராத் போன்ற வட மாநிலங்களில் இருந்து கி.பி. 6 அல்லது 7-ம் நூற்றாண்டுகளில்தான் இவர்கள் தமிழகத்தில் குடியேறியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது

நரிக்குறவர்கள் சிவனை முதற்கடவுளாகக் கொண்டாலும் காளியம்மன், மாரியம்மன், துர்க்கை போன்ற பெண் கடவுளர்களையும் வணங்குகிறார்கள். எருமையைப் பலியிடுவது அவர்களின் வழக்கம்.

குறவர் சமூகத்தினுள் எருமை பலியிடுவோர், ஆடு பலியிடுவோர் என்று இரண்டு பெரும்பிரிவுகள் இருப்பினும் அதிலும் உட்பிரிவுகள் உண்டு. குறவர்களின் சமையல் தனி ருசி கொண்டது. கறியை வேகவைத்து அதை சோற்றுடன் பிசைந்து சாப்பிடுவார்கள். அவர்களில் யாராவது இறந்துபோனால் அதே இடத்தில் ரகசியமாக புதைத்து விட்டு போய்விடுவது போன்ற நரிக் குறவர்களின் பண்பாட்டு ஆகும்.

நரிக்குறவர்கள் தற்போது மிகவும் பிற்படுத்தபட்டவர்கள் பட்டியலில் உள்ளார்கள். அவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாக உள்ளது.

தோற்றத்தொன்மம்

இந்த சமூக பெண்கள் கழுத்தில் வண்ணமயமான பாவாடை மற்றும் மணிகளை அணிந்திருந்தனர். ஆண்கள் நீண்ட முடியை வைத்திருப்பார்கள். இந்த மக்கள் காட்டில் வாழ்ந்தனர். அவர்கள் விலங்குகளையும், பறவைகளையும் சாப்பிடுவார்கள். வழிபாட்டு முறையில் சிவனை முழு முதற் கடவுளாகக் கொண்டாலும் சடங்குகளில் காளி, ஈஸ்வரி, மாரியம்மன், துர்க்கை என்று பெண் கடவுளர்களுக்கே முக்கிய இடமிருக்கிறது. சடங்குகளின் அர்ப்பணிப்பு தேவியரையே சேருகிறது. அதேபோல தேவியரே குறிசொல்லும் பூசாரியில் தோன்றி சனங்களுக்குத் தீர்வு வழங்குகிறாள். நரிக்குறவர்களிடம் இருக்கும் இன்னொரு முக்கியமான வழிபாட்டு முறை – எருமைப் பலியிடல்.

வாழ்வுமுறை

நரிக்குறவர் பாரம்பரிய வேட்டைக்காரர்கள். இவர்கள் வாழ்வாதாரத்திற்காக பயணிக்கிறார்கள். இவர்கள் எல்லா மாநிலங்களிலும் உள்ள பெரிய கோயில்களுக்குச் சென்று தங்கள் ஊசி, பாசி, மணிகளைக் கொண்ட ஆபரணங்களை விற்று சீசன் முடிந்ததும் வீடு திரும்புவார்கள். பச்சை குத்துவதும் இவர்களின் தொழில்களில் ஒன்றாக இருக்கிறது. நரிக்குறவர் கூடாரங்களில் வசிப்பவர்கள். அரசின் முயற்சியால் இவர்களுக்கு இலவச வீடும்,வீட்டுமனைப் பட்டாவும் வழங்கப்படுகின்றன. முதியோர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். முதியோர்கள் வகுக்கும் கட்டுப்பாட்டை இவர்களில் படித்தோர் உட்பட அனைவரும் ஏற்கின்றனர். திருமணத்தில் ஆண்களே பெண்கள் குடும்பத்திற்கு பரிசப்பணம் தரவேண்டும். வேற்று சமூகப் பெண்களைக் கிண்டல் கேலி செய்வதில்லை.[1]

குறவர்கள் தங்கள் இனத்துக்குள்ளாகவே திருமணம் செய்துகொள்வார்கள். வெளியாட்கள் குறப் பெண்ணை திருமணம் செய்துகொண்டால் அவளை தங்கள் இனத்துக்குள் சேர்க்க மாட்டார்கள். இனத் தூய்மை பேணுவது அவர்களின் இயல்பு.

குறவர் இனப் பெண்கள் மணவிலக்குப் பெற இயலும். பஞ்சாயத்துக் கூடி இருவருக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளை நீக்கி ஒன்றுசேர்க்க முயற்சிப்பார்கள். அது சாத்தியமாகாத நிலையில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை எடுத்து வைத்து ஆளுக்கொரு வைக் கோலை எடுத்து மூன்றாக முறித்து அந்த தண்ணீரில் போடச் செய்வார்கள். அவ்வளவுதான் அவர்களுக்குள்ளான மணஉறவு முறிந்துவிட்டதாக அர்த்தம்

திருமணத்துக்குப் பிறகு ஒரு வருட காலத்துக்கு ஆண் வீட்டில் பாதிநாளும், பெண் வீட்டில் பாதி நாளும் மணமக்கள் இருக்க வேண்டும். அதன் பிறகு தனியே வாழலாம். நரிக்குறவ மக்கள் பெண் குழந்தை பிறந்தால் கொண்டாடுவார்கள். பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள மாப்பிள்ளைதான் பெண்ணுக்கு வரதட்சணைத்தரவேண்டும். கல்யாணச் செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மாப்பிள்ளைக்கு சாமிச் சொத்து இருக்க வேண்டும்.. சாமிச் சொத்து என்பது மூதாதையர்கள் கொடுத்துப் போன சாமிப் பொருட்களாகும். அதாவது வெள்ளிச் சிலைகள்,வழிபாட்டுச் சாமான்கள். இதை புனிதமாக வைத்து பாதுகாத்து வருவார்கள்.

குடிப்பதும், சினிமா பார்ப்பதும் அவர்களின் விருப்பமான பொழுதுபோக்கு கள். தங்களுக்கு என நிறைய கட்டுப்பாடுகள், ஒழுக்கவிதிகளைக் கொண்டவர்கள் அவர்கள். வயதான குறவர்களைப்

பராமரிக்க வேண்டியது மகனின் கடமை. இறந்தவர்களை ரகசியமாக புதைத்துவிட்டு போய்விடுவார்கள்.

சமூகம்

படிப்பறிவு பெரும்பாலும் இல்லாதவர். எனினும் சுகாதாரத்தில் கவனம் உடையவர். காண்பதற்கு சுத்தமில்லாமல் இருந்தாலும் இவர்கள் வாழையடிவாழையாக உட்கொள்ளும் நாட்டுமருந்துகள் இவர்களின் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. குறிப்பாக குழந்தைகளுக்கு வயிற்றில் பூச்சிகள் வராமலிருக்க வருடத்திற்கு ஒரு முறை தங்களது பாரம்பரிய மருந்தினைத் தருவர். இதுபற்றி ஆராய்ந்தவர் டச்சு நாட்டு அறிஞர். பெண்கள் கலைவேலைப்பாடுகளில் கைத்தேர்ந்தவர். ஆண்கள் துப்பாக்கிச் சுடுவதிலும், கவண்வில்லிலும் திறமை மிக்கவர். பேச்சு மொழி உண்டு. எழுத்து மொழி இல்லை. தமிழ்நாட்டு அரசால் இவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அறிவிக்கப்பட்டவர்கள். எனினும் மலைவாழ் மக்களின் இயல்பைக் கொண்டிருப்பவர். பெரும்பாலும் நாடோடி வாழ்க்கை வாழ்பவர்கள் ஆவர். குருவிக்காரர் என்ற பெயரும் இவருக்கு உண்டு.

நரிக்குறவர்கள் சிவனை முதற்கடவுளாகக் கொண்டாலும் காளியம்மன், மாரியம்மன், துர்க்கை போன்ற பெண் கடவுளர்களையும் வணங்குகிறார்கள். எருமையைப் பலியிடுவது அவர்களின் வழக்கம்.

குறவர் சமூகத்தினுள் எருமை பலியிடுவோர், ஆடு பலியிடுவோர் என்று இரண்டு பெரும்பிரிவுகள் இருப்பினும் அதிலும் உட்பிரிவுகள் உண்டு. குறவர்களின் சமையல் தனி ருசி கொண்டது. கறியை வேகவைத்து அதை சோற்றுடன் பிசைந்து சாப்பிடுவார்கள். அவர்களில் யாராவது இறந்துபோனால் அதே இடத்தில் ரகசியமாக புதைத்து விட்டு போய்விடுவது போன்ற நரிக் குறவர்களின் பண்பாடு.

வறுமை, பிற மதத்தின் தூண்டுகோளால் மதமாற்றம், அரசாங்க சலுகையின்மை போன்ற காரணங்களால் வரலாற்று புத்தகத்தில் காணாமல் போனவர்கள் இவர்கள். தமிழ்நாட்டில் இச்சமூகத்தினர் பல ஊர்களில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையாக நாடோடிகளைப் போல் அவ்வப்போது இடம் பெயர்ந்து கொண்டிருப்பர். இவர்கள் பேருந்து நிலையங்கள், ரயில்நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களில் ஊசி, பாசி போன்ற சிறு பொருட்களை விற்பனை செய்யும் தொழிலைச் செய்து வருகின்றனர். குறவர்கள் சித்தமருத்துவம் இயற்கை மருத்துவம் அறிந்தவர்கள். நாடி பார்த்து நோய்க்குறி சொல்லுவார்கள். இன்றய நவீன மருத்துவம் வந்ததும் இவர்களை ஏமாற்றுக்காரர்களாக சமூகம் சொல்லுகின்றது. குறத்தி குறி சோசியம் இலக்கிய காலத்திலிருந்து பெருமை வாய்ந்தது.

நரிக்குறவர் பெயர் காரணம்

“தமிழகத்தில் நாகரிகம் அறியாமல் இருக்கும் பழங்குடி மக்களைப் பார்த்துத்தான் குறவர் என்று அழைத்தனர். அவ்வகையில் ஏறத்தாழ எழுபது வகையான குறவர்கள் இருக்கின்றனர். இருந்தாலும் இவர்களைத் தொழில் அடிப்படையில் பூனைகுத்தும்குறவர் உப்புக்குறவர் மலைக்குறவர் என பல வகையினராகப் பிரித்திருக்கின்றனர்” அதிலும், நரியினை வேட்டையாடி அதன் இறைச்சியை உண்டு விட்டு அதன் தோல் , பல், நகம், வால், கொம்பு போன்றவைகளைப் பதப்படுத்தி அவற்றை ஊர் ஊராகக் கொண்டு சென்று விற்று வருவதால் இவர்களுக்கு நரிக்குறவர்கள் எனப்பெயர் வந்தது என்கின்றனர்.

நரிக்குறவர்களின் மொழி

நரிக்குறவர்கள் இனம் நாடு முழுவதும் பரவலாக இருந்து வருகின்றனர். இவர்களுடைய மொழியைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி செய்த வண்ணமே உள்ளனர். எனினும் இம்மொழி எழுத்து வடிவம் இல்லாத மொழியாக பேச்சு வழக்கில் மட்டும் இருக்கும் மொழியாகவே இருக்கிறது.

இவர்கள் ஓரிடத்தில் வாழாமல் வேட்டையாடுவதற்கும், பாசிமணிகளைக் கோர்த்து விற்பனைச் செய்வதற்கும் இடமிட்டு இடம், ஊர் விட்டு ஊர், மாநிலம் விட்டு மாநிலம் என்று இடம் பெயர்ந்து கொண்டே இருப்பதால் இவர்கள் கலாச்சாரம், பண்பாடு, மொழி அனைத்திலும் இவர்கள் செல்லும் பகுதியில் பேசப்படும் பல்வேறு மொழிகள் கலந்த நிலையே இருக்கிறது. இவர்கள் மொழியில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மராத்தி, உருது, குஜராத்தி என 24 மொழிகளின் கலப்பு இருப்பதாகக்கூறுகின்றனர். நரிகுறவர்கள் பேசும் மொழி 'வாக்ரிபோலி' என்றும் அவர்கள் பேசும் மொழி ஒரு கலப்பு மொழி என்றும் அறிய முடிகிறது. இந்த மொழி இந்தோ - ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. தமிழ் பேசும் மக்களுக்கு இம்மொழி இன்னும் புரியாத மொழியாகவே உள்ளது.

நரிக்குறவர் எனப்படுவோர் தமிழ்நாட்டில் வந்தேரி நாடோடி பழங்குடி சமூகம் ஆகும். இவர்கள் பாரம்பரிய உண்டிகோலால் குருவி அடிப்பது, நரி பிடிப்பது மற்றும் மலை சாரல் பகுதியில் வாழ்ந்தவர்கள். இவர்களின் வாழ்வாதாரத்திற்காக மணிகள் தயாரித்தல் மற்றும் விற்பது போன்ற மாற்றுத் தொழிலை செய்து வருகின்றனர்.

.

**குறவர் செயல்கள் இன்றைய நாகரீகம்**

குறவர்கள் வாழ்க்கை நாடோடி வகையை சார்ந்ததால் இவர்களின் வாழ்வில் நடைமுறை விஞ்ஞானமும் கலந்தே இருக்கும்.

பாட்டுப்பாடி பச்சை குத்துவதும் குறத்திகளின் தொழில் இன்று பலர் நவீனமாக நாகரிகப் பச்சை குத்திக் கொள்கிறனர்.

குறவர்கள் கூடாரங்களில் வசிப்பவர்கள் தற்போது அரசாங்கம் இலவச வீடு மற்றும் வீட்டுமனை பட்டாக்கள் வழங்கி வருகின்றது. குறவர்கள் பிழைப்புக்காக ஊர் ஊராகச் சுற்றுவார்கள். எங்கு சென்றாலும் அவர்கள் பொருள்களையும் எடுத்தே செல்வார்கள். பொழுது போக்குகாக ரேடியோவை தோலில் கயிறு கட்டி வைத்துக் கொண்டு பாட்டுக் கேட்ட வண்ணம் இவர்கள் வேலையைப் பார்ப்பார்கள். தற்போது நாகரீகமாக கையடக்க ரேடியோ கேட்டு மகிழ்கின்றோம்.

இப்படி செல்லும் போது கைக்குழந்தையும் தன் தோலில் துணியை அடக்கமாக கட்டி அதன்மேல் குழந்தையை அமர்த்தி எடுத்துக் கொண்டு தன் வேலைகளில் ஈடுபடுவார்கள். தற்போது தன் குழந்தையை எடுத்துச் செல்ல தோலில் எடுத்து செல்லும் பை பயன் படுத்துகின்றோம்.

குறவர்கள் மணிக்கோர்க்கும் போது பாசிமணி ஊசி மற்றும் இதரப பொருள்களை இடுப்பில் (பெண்கள் கழுத்தில்) பை அல்லது டப்பா கட்டி வைத்துக் கொண்டு சுலபமாக வேலை செய்வார்கள். தற்போது இடுப்புப்பை பயன்படுத்துகின்றோம்.

இதுபோல் குறவர்கள் வாழ்வில் கலந்துவிட்ட விஞ்ஞானம் என்று சொல்லிக்கொண்டே போகலாம். குறவர்கள் வாழ்க்கை இயற்கையோடு சேர்ந்தே இருப்பதால் இவர்களின் வாழ்க்கையின் அனுபவ விஞ்ஞானம் அதிகம் காண முடியும்.

இலக்கியங்கள் கதைகள், பாடல்கள், சினிமாக்கள் என்று அனைத்திலும் குறவன் குறத்தியைப்பற்றி சொல்லாத ஊடகங்கள் இல்லை, ஆனால் இவர்கள் இந்திய சமுதாயத்தை சேர்ந்தவர்கள்தான் எனபது பலருக்கும் புரியாத புதிர். இதற்கு இவர்களின் சமுக அமைப்பும் சமுக கட்டுபாடும் மற்ற சமுகத்திடமிருந்து விளக்கியுள்ளது. தேர்தல் சமயத்தில் மட்டுமே இவர்களை இந்தியர்களாக மதிப்பதும் பிறகு மறந்துவிடுவதும் வாடிக்கையாகும்.

குறவர்கள் நாடோடி இனத்தை சார்ந்தவர்கள், இவர்களின் தொழில் மற்றும் சமுக அமைப்பு முறைகளில் 20வது வகை குறவர்கள் இருப்பதாக கூறுகின்றனர். குறவன் என்றவுடன் நமக்கு நினைவிக்கு வருவது தெருவோரங்களில் படுத்து உறங்கும் நரிக்குறவர்களைதான். ஆனால் குறவன் என்ற சமுகத்திற்கும் நரிக் குறவனுக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. அவர்களது மொழி, கலாசாரம், பழக்கவழக்கங்கள் சாதாரண் குறவர் இன மக்களின் பழக்கவழக்கங்களில் இருந்து மாறுப்பட்டதாகும்.

தமிழ் நாட்டில் குறவர் பிரிவுகள்.

குறவர்
உப்புக்குறவர்
தப்பைக்குறவன்
கந்தர்வக்கோட்டைகுறவர்
ஆத்தூர்கீழநாடுகுறவர்(சேலம்)
தாடிக்குறவர்(தஞ்சை,திருச்சி)
மலைக்குறவர்
இஞ்சிக்குறவர்(தஞ்சை,திருச்சி)
கொரவர்(செங்கல்ப்பட்டு)
தனிக்குறவர்
தோகமலைக்குறவர்
வரகநேரிக்குறவர்
களிஞ்சிதப்பகொரவர்(த்ஞ்சை,புதுகோட்டை)
மோண்டாகுறவர்
பொன்னைக்குறவர்(வடாற்காடு)
தனிக்குறவர்
சேலம்மேலநாடுகொரவர்(மதுரை,கோவை,ஈரோடு,புதுகை,திருச்சி,சேலம்)
சக்கரத்தாமடைகுறவர்
சேலம்உப்புகுரவர்
சாருங்கப்பள்ளி குறவர்

இப்படி பலவகை குறவர்கள் இருந்தாலும் எல்லோரும் பிந்தங்கிய நிலையில்தான் உள்ளனர்.

நரிக்குறவர்கள் கல்வியாலும் பொருளாதாரத்தாலும் மிகவும் பின் தங்கியவர்களாகவே இன்றைக்கும் இருக்கிறார்கள். இவர்களுக்கு என 'நலவாரியம்' அமைக்கபட்டுள்ள போதும் உயர்கல்வி பெறுவதிலும் வேலைவாய்ப்பிலும் இன்னமும் அதிக வளர்ச்சி அடையவில்லை.

பார்வை நூல்

1. நரிக்குறவர் இனவரைவியல் - கரதூர். பத்மபாரதி புதுவை மொழியால் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் புதுச்சேரி பதிப்பு - 1978
2. நரிக்குறவ பழங்குடி இன மக்கள் - சீனுவாசவர்மா.கோ சிதம்பரம் அண்ணாமலை நகர் பதிப்பு - 2004
3. தமிழக நாட்டுப்புறவியல் – சற்குணவதி மணிவாசகர் பதிப்பகம் சென்னை.